**O.S.No. 194/2018**

**Date 03.07.2025**

**வா.சா.1 காளிமுத்து**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவாசொத்து மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 58 செண்ட் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் சண்முகத்தேவர் குமாரர் கொடுங்காலத் தேவர், சீவலத்தேவர் குமாரர் சண்முகையா தேவருக்கு பாத்தியப்பட்டுள்ளதா என்றால் 1 ஏக்கர் 68 செண்ட் பாத்தியப்பட்டு இருந்தது. மேற்படி மீதமுள்ள சொத்துக்கள் கோட்டைத்தாய் வகையறாவுக்கு பாத்தியப்பட்டு இருந்தது. இவ்வழக்கின் 2 முதல் 6 பிரதிவாதிகள்மேற்படி கொடுங்காலத்தேவரின் மக்கள் என்றால் சரிதான். அது போக மாடத்தி என்ற மகள் என்பவர் கொடுங்காலத்தேவருக்கு உண்டு என்றால் சரிதான்.மேற்படி மாடத்தியின் கணவர் தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதவாதி 1 ஏக்கர் 68 செண்ட்டை கொடுங்காலத்தேவரிடமும், சண்முகையா தேவரிடம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரையம் பிரிவின்றி 1 ஏக்கர் 68 செண்ட் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 666/3, 667/2 பிரிவின்றி 1 ஏக்கர் 68 செண்ட் கிரையம் பெற்றுள்ளார். 1 ஏக்கர் 68 செண்ட் கிரையம் பெற்ற பிறகு தனியாக உட்பிரிவு செய்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி கிரையத்திற்கு பிறகு 1 ஏக்கர் 68 செண்டை 1ம் பிரதிவாதி அனுபவம்செய்து வந்துள்ளார் என்றால் சரிதான். 1 ஏக்கர் 68 செண்டை 1ம் பிரதிவாதி அனுபவம்செய்வதை இடையூறு செய்த காரணத்தினால் என் மீதும் மற்ற வாதிகள் மீதும் மு.வ எண். 69/1993 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுகுறித்து தெரியாது. எனக்காவும், மற்ற வாதிகளுக்காகவும் சேர்ந்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். தென்பனவடலி கிராமத்தில் வேலுத்தேவர் குமாரர் தங்கமுத்து என்பவர் 6 வாதி என்றால் சரிதான். வேலுத்தேவர் மகன் மாடசாமி என்பவர் 4ம் வாதி என்றால் சரிதான். வேலுதேவர் மகன் கூத்தாடி என்பவர் 5ம் வாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்தை பொறுத்து சங்கரன்கோவில் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மு.வ எண். 69/1993 வழக்கை தாக்ல செய்திருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு பற்றிய விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், நான் வேண்டுமென்றே மேற்படி வழக்கை தெரியாது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி வழக்கும் 1ம் பிரதிவாதி கோரியவாறு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கை ஒப்புக்கொண்டால் என்னுடைய வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து இன்றைய தேதி வரையில் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா இருந்து வருகிறது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் எங்களுக்கு உரிமை இல்லை என கட்சி செய்கிறார் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்றுள்ளேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**